மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 25.10.2011

மீனவர் நலனுக்கு எனது அரசு எப்போதும் முன்னுரிமை அளித்து வருகிறது. நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும், நிவாரணத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மீனவ மக்களுக்கு சமூக பாதுகாப்பு அளிப்பதையும், தமிழக மீனவர்களின் மீன்பிடி உரிமையைப் பாதுகாப்பதையும், மீனவர்கள் பயனடையும் வகையில், ஏற்றுமதியைப் பெருக்குவதையும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதையும் தலையாயக் கொள்கைகளாகக் கொண்டு எனது அரசு செயல்பட்டு வருகிறது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், மீன் உற்பத்திக்கு உகந்த வழியில் மீன் பிடிக்க விலக்கு அளிக்கப்பட்ட 45 நாட்களில், மீனவக் குடும்பத்திற்கான உதவித் தொகை 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும், பருவ காலத்தில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள இயலாத சூழ்நிலையில் இருக்கும் மீனவக் குடும்பங்களுக்கு உதவித் தொகையாக 4,000 ரூபாய் வழங்கப்படும் என்றும் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன.

நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற உடனேயே, மீன்பிடித் தடை காலத்தில் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை 1,000 ரூபாயில் இருந்து 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்கினேன்.

தற்போது, தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட மற்றொரு வாக்குறுதியை செயல்படுத்தும் விதமாக, மீன்பிடிப்பு குறைந்த காலங்களில், மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். திருவள்ளூரில் இருந்து ராமநாதபுரம் மாவட்டம் வரை உள்ள மாவட்டங்களில் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான மூன்று மாதங்கள்; கன்னியாகுமரி மாவட்டத்தில் ஜனவரி முதல் மார்ச் வரையிலான மூன்று மாதங்கள்; மற்றும் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான மூன்று மாதங்கள் மீன்பிடிப்பு குறைந்த காலம் ஆகும். மீன்பிடிப்பு குறைந்த காலத்தில் மீனவக் குடும்பங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு கட்டும் விதமாக, மீனவக் குடும்பம் ஒன்றுக்கு ஒட்டுமொத்தமாக 4,000 ரூபாய் நிவாரணத் தொகை வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். 70 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் இந்த மகத்தான திட்டத்தின் கீழ் சுமார் 1,70,000 மீனவக் குடும்பங்கள் பயன் பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை தவிர, தமிழ்நாட்டில், 13 கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவர்களுக்கு, மீன்பிடிப்பு குறைந்த 3 மாதங்களுக்கு, மத்திய அரசின் நிதியுதவியுடன் கூடிய தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், கடல் மீனவர் ஒவ்வொருவருக்கும் 1800 ரூபாய் வீதம் நிவாரணத் தொகை வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் மீனவர்களிடமிருந்து சந்தாத் தொகையாக பெறப்படும் 600 ரூபாய்க்கு ஈடாக, மத்திய அரசின் பங்குத் தொகை 600 ரூபாயும்,

மாநில அரசின் பங்குத் தொகை 600 ரூபாயும் சேர்த்து 1800 ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் 2 லட்சம் மீனவர்கள் பயன் அடைவர்; அரசுக்கு சுமார் 24 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

மேலும், மீனவ மகளிருக்கு நிவாரணத் தொகை வழங்கும் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் கீழ், மீனவ மகளிரிடமிருந்து சந்தாத் தொகையாக வசூலிக்கப்படும் 600 ரூபாயுடன் மாநில அரசு தனது பங்காக 1200 ரூபாய் வழங்கும். இதன்படி, மொத்தத் தொகையான 1800 ரூபாய் மீனவ மகளிருக்கு மீன்பிடிப்பு குறைந்த காலங்களில் நிவாரணத் தொகையாக வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 1,62,000 மீனவ மகளிர் பயனடைவர்; நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்கான செலவு 19 கோடியே 42 லட்சம் ரூபாய் ஆகும்.

இவ்வாறு, மொத்தம் 113 கோடியே 42 லட்சம் ரூபாய் செலவில் மீனவக் குடும்பங்கள், மீனவர் மற்றும் மீனவ மகளிர் நலனுக்காக எனது அரசு செயல்படுத்தும் நிவாரண உதவித் திட்டங்கள் மீனவ மக்களுக்கு உரிய சமூக பாதுகாப்பை அளிக்கும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**